
செம்மண்

நிலம் 3 துகள் 150 வள்ளுவர் ஆண்டு 2052, 03 - 09 ஆனி 2023 வாரமலர் பக்கங்கள் 16

விதுரன்

# இனப்படுகொலையை நிரூபித்தல்

கடந்து சென்ற மே மாதத்தின் 18ஆவது தினத்தை இலங்கையில் இனப்படுகொலை நடந்தேறிய நினைவு தினம் என்று கனடா நாட்டுத் தலைமை அமைச்சர் ஜஸ்ரின் ரூடோ அறிவித்தார். தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் என்பவர் இறுதிப்போரின்போது இனப்படுகொலை என்றொன்று இடம்பெறவில்லை என ஏற்கனவே சொல்லியிருந்தார். இலங்கை அரசைப் பாதுகாக்க வேண்டிய தேவை கனடாத் தலைமை அமைச்சருக்கு இல்லை. ஆனால் சிங்கள ஆட்சியாளர்களைப் பகைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து பெறும் சலுகைகளை இழப்பதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் அரசைக் காட்டிக்கொடுக்க முன்வரப்போவதில்லை. கனடாத் தலைமை அமைச்சரின் அறிவிப்பை வினைத்திறன் மிக்கதாக மாற்ற வேண்டிய கடப்பாடு ஈழத்தமிழர்க்கு உண்டு. இறுதிப்போர்க்குற்றம் தொடர்பான ஆவணங்களைத் திரட்டி அதைத் தமக்குச் சார்பாகக் குரல் கொடுக்கின்ற கனடியத் தலைமை அமைச்சருக்கு அனுப்பி வைக்கவேண்டிய தேவை தமிழ்த் தேசியம் பேசுகின்ற அரசியல்வாதிகளுக்கும் இருக்கிறது. போர் முடிவுற்று 14 ஆண்டுகளின் பின் கனடாத் தலைமை அமைச்சர் இவ்வாறான அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும் தமிழர் தரப்பில் கையளிக்கப்படும் ஆவணங்களே அதற்கு வலுச்சேர்ப்பனவாக இருக்கும்.



**இலங்கை அரசின் மறுப்பு**

மே 18ஐத் தமிழினப் படுகொலை நடந்த நாளாக ஜஸ்டின் ரூடோ அறிவித்ததற்கு இலங்கை அரசு தனது எதிர்ப்பை அறிவித்திருக்கிறது. கடனாத் தலைமை அமைச்சரின் கூற்று உண்மையானது - நியாயமானது என்பதை மேலும் உறுதிப்படுத்தி இலங்கைப் படையினரின் போர்க் குற்றங்களை உறுதிப்படுத்த வேண்டியது இறுதிப் போருக்கு முகம் கொடுத்த தமிழரின் கடப்பாடாகும். அவ்வாறு செயற்படாவிட்டால் இலங்கை அரசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறிவருகிற இறுதிப்போரின்போது இனப்படுகொலை இடம்பெறவில்லை என்ற கருத்தே வலுப்பெற வாய்ப்புண்டு.


**படையினர் மக்களை நிர்வாணமாக்கினரா?**

இறுதிப் போரை முன்னின்று நடத்திய முக்கிய படைத் தளபதிகளில் ஒருவர் சவேந்திரசில்வா. போருக்கு நடுவில் படையினரிடம் தஞ்சமடைந்த மக்க ளுடன் மக்களாகச் சென்ற குண்டு தாரிக் கரும்புலிப் போராளி வெடித்த போது படையினர் சிலரும் சரணடை யச் சென்ற மக்களில் சிலரும் இறந் தனர். அதற்குப் பின்னர் படையி னரிடம் தஞ்சம் கோரிச் சென்ற அப் பாவி மக்களைப் படையினர் நிர்வா ணப்படுத்தினர். குண்டுகளைப் பரி சோதிப்பதாகக் கூறிக்கொண்டு தமது காம இச்சைக்கு விருந்தளிந்தனர். எள்ளிநகையாடினர். ''யுகமுடிவும் பின்னரும்'' என்ற பெயரில் நிலாந்தன் என்பவர் எழுதி அண்மையில் வெளியாகிய கவிதைத் தொகுதியின் பின்புற அட்டையில் இந்த விடயம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விடயத்தைத் துணிகரமாக எழுதியது மட்டுமல்லாது அந்தப் புத்தகத்தைச் சிங்கள மொழியாக்கமும் செய்தி ருக்கிறார் நிலாந்தன். அந்தச் சிங்க ளப் பதிப்பிலும் அது பதிவு செய்யப் பட்டிருக்கிறது. நிலாந்தனைப் போல இறுதிப் போரின் போது படையினரால் பாதிக்கப்பட்ட ஏனையவர்களும் தமக்கு நடந்தவற்றை எழுத்து மூல மும் வேறு பல வழிகளிலும் வெளிக் கொணர வேண்டும். அது கனடியத் தலைமை அமைச்சரின் கூற்றுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமையும்.

''வாக்களிக்கப்பட்ட நாடு
இறக்கி வைக்கப்பட முடி
யாப் பாரமாகிய அன்று
இறுதி இராப்போசனம்
சேமித்திருக்கவில்லை
குடிக்கத் துளி நீரும் கிடைக்
கவில்லை
தாயும் வளர்ந்த மகளும்
நிர்வாணமாக
தந்தையும் வளர்ந்த மகனும்
நிர்வாணமாக
மருத்துவனும் பெண் தாதி
யரும் நிர்வாணமாக
அதிகாரியும் பெண் பணியா
ளரும் நிர்வாணமாக
சரணடைந்தபோது யுகம் முடிந்தது''

என்கிற நிலாந்தனின் இந்தக் குறிப்பு உண்மையானது. இறுதிப்போர்க்காலத் தில் அவர் அனுபவித்த விடயத் தையே இதில் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்லாது கிளிநொச்சியில் தனியார் ஆங்கிலக் கல்வி நிலை யத்தை நடத்திய அவருக்கு அந்தப் பகுதி மக்களில் பலரைத் தெரிந்திருந் தது. இறுதிப்போரில் பாதிக்கப்பட்ட மருத்துவர்கள், தாதியர்கள், அரச அதிகாரிகள், ஊழியர்கள் எனப் பலரை அவருக்குத் தெரிந்திருக்கிறது. தனது கவிதையில் அவர் குறிப்பிடு வதும் அந்த நிஜ மாந்தர்களையே. நிலாந்தன் குறிப்பி டுகிற உத்தியோ கத்தர்கள், பொது மக்களைப் போல இறுதிப் போரில் படையினரால் பாதிக்கப்பட்ட - துன்புறுத்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் அனைவரும் உள்நாட்டிலும் வெளிநாடுகளி லும் தற்போதும் இருப்பதால் தாம் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டார் கள் என்று தாமே சொல்லும்போது அதற்கு வலு அதிகமாக இருக்கும். பிறிதொரு நபராக நிலாந்தன் குறிப்பி டும்போதே இவ்வளவு சக்தி மிக்க தாக விடயம் இருக்கிறபோது அவ ரவர் தமது அனுபவங்களைப் பகி ரும்போது அது மேலும் கனதியுடை யதாகவே இருக்கும். ஒவ்வொருவரும் படையினர் தம்மை நிர்வாணமாக்கிய சம்பவத்தையும், துன்புறுத்தியதை யும், கொச்சைப்படுத்தியதையும், சித்திரவதை செய்ததையும், தமக்கு அறிந்த - தெரிந்தவர்களைக் கொன்று குவித்ததையும், பாலியல் சீண்டல் களைச் செய்ததையும், வன்புணர்ந் ததையும் என அனைத்தையும் எது? எங்கு? எவ்வாறு நடந்தது என்பதைச் சத்தியக் கடதாசிபோல தயாரித்துப் பாரப்படுத்த முடியும். அதைக் கனடி யத் தலைமை அமைச்சரின் கைக்குக் கிடைக்கச் செய்தால் அவரது கருத்தை மேலும் வலுப்படுத்த அது உதவும்.





இத்தகைய முன்னெடுப்புகளைத் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்க ழகத் தரப்பினர், பலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் எனப் பலராலும் மேற்கொள்ள முடியும். அதைச் செய் வதே தமிழர் பலரின் கடப்பாடும் தேவையும்கூட. போர் முடிந்து இத்தனை வருடங்களுக்குப் பிறகா வது தமிழர்கள் இதைச் செய்ய முன் வரவேண்டும். நிரம்பிக் கிடக்கும் போலித் தேசிய அரசியல்வாதிகளை நம்பியிராமலும் இதற்குள் உள்ள டக்காமலும் கனடாத் தலைமை அமைச்சர் போன்ற நபர்களைக் கூட்டுச்சேர்த்துக் கொண்டு தமக்குரிய நீதியைப் பெறுவதற்குத் தமிழர்கள் இனியாவது துரித கதியில் செயலாற்று வதே சிறந்தது. அதற்காக ஒவ்வொரு வரும் நிலாந்தனைப்போல போர்ச் சாட்சியங்களாக மாறவேண்டும்.



தர்மராசா

சிறைக்குள்...

111

# மீண்டும் களுத்துறையில்....!

23.6.2002 அன்று அதிகாலை நான்கு மணிக்கு அனுராதபுரச் சிறையில் இருந்து எங்களைக் களுத்துறைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனபோதிலும் காலை 8.30 மணியளவில்தான் சிறைச்சாலைப் பேருந்தில் ஏற்றப்பட்டோம். மாலை 3.15 மணியளவில் களுத் துறைச் சிறையைச் சென்றடைந்தோம். அன்றைய களுத்துறைச் சிறைச்சாலைப் பதிவேட்டில் அச்சுக்காரர் 18பேர், சந்தேகநபர்கள் 208பேர் என உள்ளே அடைக் கப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை எழுதப்பட்டிருந்தது. அன்றைய பய ணத்தின் பின் அச்சுக் கைதி ஒருவரும் சந்தேக நபர்கள் பத்துப்பேரும் அந்த எண் ணிக்கைக்கு மேலதிகமாகச் சேர்ந்துகொண்டோம்.

களுத்துறையின் பி6 வார்ட்டுக்குச் சென்றபோது பழைய நண்பர்கள் பலர் விடுதலையாகமலும் விடுதலையாகவிருந்த நிலையில் இருந்தோர் மீண்டும் புதிய தவணைகளைச் சுமந்துகொண்டு உடல் பலம், மனப்பலம் எல்லாவற்றையும் இழந்து காத்திருந்தது கவலையளித்தது. சிறைக்குள் நான் படுகிற துன்பத்தைவிட மற்றவர்களின் நிலையைப் பார்க்கும்போது வேதனை அதிகமாக இருக்கும். எனது சிறைவாழ்க்கையில் எனது மன நிலையில் இனி அலைச்சல் இல்லை, வேறு சிறைகளுக்கு ஏற்றப்படவும் வாய்ப்பில்லை, என்கிற விடயங்களை நினைக்கும் போது திருப்தியாக இருந்தது. சிறை அறைகளுக்குள் பூட்டப்பட்டு இயற்கைத் தேவைகளைக்கூடக் கட்டுப்படுத்தவேண்டிய கட்டாயமும் இனி இருக்காது என்ற நிம்மதி இருந்தது. ஆனால் கொழும்பு நீதிமன்யில் தொடுக்கப்பட்ட வழக்குக்காகத் தொடர்ந்து வருடக்கணக்காக களுத்துறைச் சிறையில் இருப்போ ரது மனநிலை நிச்சயமாக என்னைப்போல இருக்காது. நான் பல சிறைகளையும் அலைச்சல்களையும் அனுபவிக்க வேண்டியிருந்ததால் அவற்றுடன் ஒப்பிடும் போது களுத்துறைச் சிறைச்சாலை பரவாயில்லை என்ற நிலையே இருந்தது.

# புலிகளின் தாக்குதலைத் தாமதப்படுத்தினேன்



றியர் அட்மிரல் பிரசன்ன ஹேமகே என்பவர் இலங்கைக் கடற்படையில் அதிகாரியாக இணைந்தவர். காலப்போக்கில் றியர் அட்மிரல் பதவி வரை உயர்ந்தவர். திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான கடற்பரப்பில் புலிகளுக்கு எதிரான பல போர்களில் ஈடுபட்டார். இதனால் இவருக்கு ரணவிக்கிரம, ரணசூர விருதுகள் நான்கும், வேறு பல பதக்கங்களும் இலங்கை அரசால் வழங்கப்பட்டுள்ளன. இலங்கைக் கடற்படையினருக்கு வழங்கப்படும் அதியுயர் பதக்கமான வீர விக்கிரம விபூஷண பதக்கத்தையும் இவர் பெற்றுள்ளார். இவர் தனது போர் அனுபவங்களை நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்தில் நளின் சமக கெலிங் (நளினுடன் நேரடி) என்ற நிகழ்ச்சியில் கீழ்வருமாறு பகிர்ந்துள்ளார்.

மொழியாக்கம்
கமலநாதன்

நான் நாலந்தா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரம் வரை படித்தேன். இலங்கை வான் படையில் இணைந்து வானோடியாக வேண்டும் என்ற விருப்பத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற போதும் அதில் தெரிவாகவில்லை. அதன் பின்னர் இலங்கைக் கடற்படைக்கு விண்ணப்பித்தேன். அதில் சேர்ந்தேன். கடற்படையில் 34 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறேன். அதிலும் 12 வருடங்கள் கடற்படையின் நான்காவது அதிவேக தாக்குதல் பிரிவில் கடமையாற்றினேன்.

**நல்ல சண்டைக்காரன்**

நான் புலிகளுக்கு எதிரான பல்வேறு சண்டைகளில் மிகத் துணிகரமாகத் தாக்குதல்களை முன்னெடுத்ததால் என்னை நல்ல சண்டைக்காரன் என்று கூறுவார்கள். அதேவேளை கடற்புலிகளுக்கு நல்ல பாடம் கற்பித்தவன் என்றும் புகழப்பட்டேன். நான் எனது கடமைகளைச் சரியாகச் செய்திருக்கிறேன். நான் என்.டி.சி எனப்படும் சிறப்புக் கடற்படைப் பயிற்சி ஒன்றை இந்தியாவில் பெற்றிருக்கிறேன்.

மாலையில் சிறைக் கதவுகள் பூட்டப்பட்டதும் பி6 வாட்டில் கைதிகளால் கூட்டம் கூட்டப்பட்டது. அனுராதபுரச் சிறையில் எழுந்தது போன்ற பிரச்சினை எழுந்தது. உலகக் கிண்ணக் கால்பந்தாட்டம், திரைப்படம், தொலைக்காட்சி நாடகம் ஆகியவற்றில் எதை அங்கு பொருத்தப்பட்டுள்ள தொலைக் காட்சியல பார்ப்பது என்பதுதான் அன்றைய கூட்டத் தலைப்பாக இருந்தது.

இந்த விடயம் சார்ந்த முடிவைச் சபையோரிடமே விட்டார் காம்பிறாப் பாட்டி. "நாலு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கிற உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியைத் தவறவிடக்கூடாது" என்றனர் சிலர். "தொடர்ச்சியாகப் பார்க்கிற நாடகங்களை ஒரு நாள் தவற விட்டால் அதைப் பார்ப்பதில் அர்த்தமில்லை' என்றனர் வேறு சிலர். எனக்கு மனதில் ஒரு விடயம் பட்டது. இவர்களுக்கு இந்தச் சிறைச்சாலையை விட்டுப்போகும் நோக்கமே இல்லையா...? என்று. இலங்கை அரசு கைதிகளின் மனநிலையைப் போராட்டச் சிந்தனையிலிருந்து மாற்றுவதற்கு எடுத்த முயற்சி வெற்றியடைந்திருப்பது தெரிந்தது. சமூகத் தீர்வை முன்வைக்காத இந்தியத் தொலைக்காட்சி நாடகத்தில் தன்னைப் புதைத்துக்கொண்டு அதற்காக வாதிடும் அளவுக்குக் கைதி வந்துவிட்டானே என்று நினைத்தேன். அப்போது பி 6 வாட்டில் 23பேர் மாத்திரமே இருந்தோம். அதில் 13பேர் 5வருடங்களுக்கு மேல் சிறையில் இருப்பவர்கள். ஒருவர் 9 வருடங்களையும் மற்றொருவர் 10 வருடங்களையும் பூர்த்தி செய்திருந்தனர். இறுதியில் இருவர் மாத்திரமே எஞ்சியிருந்தால்கூட அவர்களுக்கு மத்தியிலும் இவ்வாறான முரண்பாடுகள் எழத்தான் செய்யும் என்பது தெளிவாகத் தெரிந்தது.

பூசா, களுத்துறைச் சிறைகளில் என்னுடன் இருந்த சேரன் அண்மையில் விடுதலையாகி விட்டார் என்று அறிந்தேன். 11.6.2002 அன்று அவர் எனக்கு எழுதிய கடிதம் ஒன்று 23.6.2002அன்று எனக்குக் கிடைத்தது. விடுதலையாகிச் சென்ற சேரன் அதில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"இங்கு வீட்டுக்கு வீடு திவசங்கள்தான் நடக்கின்றன. சமாதானச் சூழலில் வெளியிடங்களில் இருந்து வருகிற மக்கள் எமது தேசத்தில் மகிழ்வாகத் தேனிலவுகளை நடத்துகின்றனர். எங்கட சனமோ நினைவு தினங்களையே வாழ்க்கையாகிவிட்டார்கள். சிறை நினைவுகளையும் அதன் கோரப்பிடியையும் என்னால் மறக்க முடியாது. நினைவுகள் என்றைக்கும் அழிவதில்லை. ஆனால் இந்தச் சிறைகளுக்கு எங்கள் எண்ணங்களைச் சிறைப் பிடிக்கும் வல்லமை ஒருபோதும் இருக்கப்போவதில்லை"

என்பதாக அதில் இருந்த எழுத்துகள் எனது மனதில் ஆழப் பதிந்தன. (தொடரும்)

## 45 நிமிட இடை வெளியில் 20படகுகளைப் புலிகள் கடலில் இறக்கியிருப்பது தெரியவந்தது. அதைவிட அந்தப் படகுகள் 35 நோட்டிக்கல் வேகத்தில்

**அதிவேக தாக்குதல் பிரிவு**

1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக் கடற்படையின் நான்காவது அதிவேகப் படைப்பிரிவில் சேர்ந்தேன். அது மிகவும் ஆபத்தான நடவடிக்கையாக இருந்தது. அப்போது நான் இளம் லெப்ரினன் ஆக இருந்ததால் மிக வேகமாகவும் துணிவாகவும் செயற்படுபவனாக இருந்தேன். அதனால் கடற்சண்டையில் அதிக கெட்டித்தனத்தைப் பெற முடிந்தது.

**லிவர்பூல் கப்பல் பாதுகாப்புச் சேவை**

லிவர்பூல் என்பது வர்த்தகக் கப்பல். இந்தக் கப்பலை இலங்கை அரசு திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் படையினருக்குத் தேவையான உணவு, மருந்து, வெடிமருந்து என எல்லாவற்றையும் எடுத்துச் செல்லும் முக்கிய சரக்குக் கப்பலாகப் பயன்படுத்தியது. படையினருக்கு உணவு மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் இவ்வாறான கப்பல்களைத் தாக்கி அழிப்பதில் கடற்புலிகள் அதிக அக்கறை செலுத்தினர். லிவர்பூல் கப்பலுக்கு முன்னர் சரக்குக் கப்பல் ஒன்றைப் புலிகள் முல்லைத்தீவுக் கரைக்குக் கடத்திச் சென்றிருந்தார்கள். லிவர்பூல் கப்பலையும் அவ்வாறு கடத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் அதற்கு நாம் பாதுகாப்பை வழங்கினோம். அந்தக் கப்பலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் ஒன்றின் மூலம் அழிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று புல தகவல்கள் கிடைத்தன. லிவர்பூல் கப்பலுக்குள் 7 சிப்பாய்களும் 15 இந்திய மாலுமிகளும் பணியாற்றினார்கள். அதைப் புலிகள் தாக்கினால் அவர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்ற பிரச்சனை எமக்கிருந்தது.

**கடற்புலிகளின் வியூகம்**

2007 ஜூன் 19ஆம் திகதி 2டோறாக்களுடன் பயணித்த லெப்ரினன் அமரசிங்க தொலைத் தொடர்புக் கருவி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டு முல்லைத்தீவு, நாகர்கோவில் பகுதிகளிலிருந்து கடற்புலிகள் தாக்குதல் படகுகளைக் கடலுக்குள் இறக்குகின்றனர் என்று அறிவித்தார். 20 நிமிடங்களின் பின்னர் அவர் மீண்டும் தொடர்பை ஏற்படுத்தி இது முன்னைய தாக்குதல்களைவிட முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படும் என்றார். 20 நிமிடத்துக்குள் 10 தாக்குதல் படகுகளைப் புலிகள் கடலில் இறக்கினார்கள் என்று மீண்டும் தொடர்பு கொண்டு சொன்னார். அதைத் தொடர்ந்தும் அவதானித்துக்கொண்டிருந்தபோது 45 நிமிட இடை வெளியில் 20படகுகளைப் புலிகள் கடலில் இறக்கியிருப்பது தெரியவந்தது. அதைவிட அந்தப் படகுகள் 35 நோட்டிக்கல் வேகத்தில் எம்மை நோக்கி வருவதையும் இரண்டு தற்கொலைத்தாக்குதல் படகுகளும் கூட வருவதையும் அறிய முடிந்தது. எனது கப்பலில் இருந்த ராடர் கருவிகள் மூலம் அதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.



**லிவர்பூல் கப்பலை அழிக்கும் அரசின் திட்டம்**

லிவர்பூல் கப்பலைப் புலிகள் தாக்கி அழிப்பதற்கோ கைப்பற்றுவதற்கோ அனுமதிக்கக்கூடாது என்பதில் படைத் தலைமையகம் கவனமாக இருந்தது. அதைத் தாக்க வரும் புலிகளைத் தாக்கி அழிக்க முடியாவிட்டால் லிவவர்பூல் கப்பலைத் தாமே கிபிர் வானூதியைப் பயன்படுத்தி தாக்கி அழிப்பது என்றும் கூறிக்கொண்டிருந்தார்கள். வானூர்தி மூலம் கப்பலைத் தாக்கி அழிப்பது முக்கியமில்லை நாங்கள் நிலமையைச் சமாளிப்போம் என்று அவர்களுக்குச் சொன்னேன்.

**காங்கேசன் துறைமுகத் தாக்குதல்**

கடற்புலிகளின் பெரிய படையெடுப்பின் நோக்கம் காங்கேசன்துறைக் கடற்படை முகாமைத் தாக்கி அழப்பதாகும். பருத்தித் துறைக்குள் புலிகள் வந்துவிடாதபடி உடனடியாகத் தாக்குதலை மேற்கொள்ளுமாறு தலைமைச் செயலகத்திலிருந்து கூறப்பட்டது. அவற்றை எதிர்கொள்ள எம்மிடம் ஒரு கப்பலும் அதிவேகத் தாக்குதல் டோறாக்கள் 8உம் இருந்தன. 2மாதங்களுக்கு முன்னர் இவ்வாறான தாக்குதல் ஒன்று நடந்தபோது இரண்டு கடற்படைப் படகுகள் புலிகளால் அழிக்கப்பட்டன. கடற்படை அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டனர். இதனால், புலிகளின் படகுகளை நேரடியாகத் தாக்காது எமது அணியை வடக்கு நோக்கி நகர்த்தினேன். இதன் மூலம் தாக்குதலை 4மணிநேரம் வரை தள்ளி வைக்க முடிந்தது. மாலை 6.30ஆகி இருட்டி விட்டது.

(தொடரும்)

# கஜேந்திரனுக்குப் பின்னால் மக்கள் இல்லை...!

நியூட்டன்

அண்மைக்காலமாகச் செல்வராசா கஜேந்திரன் பல போராட்டங்களை முன்னெடுத்து வருவது பலரும் அறிந்தது. இந்த நிலயில் தமிழ் மக்கள் பேரலையாக அவருக்குப் பின்னால் வரவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றபோதிலும் மக்கள் அவ்வாறு அவருக்குப் பின்னால் அணி திரளவில்லை. அதற்குப் பிரதான காரணம் மக்கள் ஜனநாயக ரீதியாகத் தமக்கிருக்கும் வாக்குரிமையைப் பயன்படுத்திப் பல தடவைகள் அவர் நாடாளுமன்றத்துக்குச் செல்வதைத் தடுத்திருந்தார்கள். அதைப் புரிந்துகொண்டாலே போதும் அவருக்குப் பின்னால் மக்கள் இல்லை என்பது தெரிந்துவிடும்.

2004ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பட்டியலில் செல்வராசா கஜேந்திரன் சேர்க்கப்பட்டிருந்தார். விடுதலைப் புலிகள் கைகாட்டிய தேர்தல் கூட்டு அது என்பதால் தமிழ் மக்கள் ஒருமித்து அதற்கு வாக்களித்தார்கள். அந்தத் தேர்தலில் கஜேந்திரன் பெற்ற வாக்குகள் 1லட்சத்து 12அயிரத்து 77. அதன் பின்னர் 2010இல் செல்வராஜா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கூட்டமைப்பிலிருந்து விலகித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தார்கள். 2009 மே மாதத்தில் போர் முடிவடைந்து புலிகள் இல்லாத சூழலில் 2010ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சிதம்பரநாதன் பத்மினி ஆகியோரை மக்கள் நிராகரித்தார்கள். அந்தத் தேர்தலில் அவர்களது கட்சியைச் சேர்ந்த யாரும் வெற்றிபெறவில்லை. இதன் மூலம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை மக்கள் ஒதுக்கினார்கள் என்பது தெளிவாகியது.

2011இல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலராகச் செல்வராசா கஜேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னரான கட்சிச் செயற்பாடுகளில் யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு மாகாணம் என அவர் கடுமையாக ஓடி உழைக்கின்ற போதிலும் 2015 பொதுத் தேர்தலில் அந்தக் கட்சி சார்பில் எவரும் நாடாளுமன்றத்துக்குச் செல்லக்கூடியவாறு மக்கள் வாக்குகள் கிடைக்கவில்லை.

2020 தேர்தலிலும் செல்வராசா கஜேந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்டார். அந்தக் கட்சிக்குக் கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்தை நிரப்புவதற்காகத் தேர்தலில் தோற்ற செல்வராசா கஜேந்திரனுக்குக் கட்சி வழங்கியது. தவிர மக்கள் பிரதிநிதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு அவர் நாடாளுமன்றத்துக்குச் செல்லவில்லை.

### தேர்தலில் தோல்வியுற்றவர்கள் நாடளுமன்றுக்குச் செல்வது

தேர்தல் என்பது ஜனநாயக நடைமுறை. அதன் பிரகாரம் மக்களால் நிராகரிக்கப்படும் வேட்பாளர் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் அனுப்பப்படுவது என்பது மக்கள் விரோதச் செயலாகும். ஆனாலும் அது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக நடைமுறையாக இருக்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி






# காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம்

## பழைய பல்லவி

உறவுக்காரர்களுக்குள் திருமணம் செய்த அண்ணன், அக்கா இருவரும் குடும்பத்தினரின் கொடுமையால் வௌவேறு சூழலில் இறந்துபோக, அண்ணனின் குழந்தைகளுடன் தனியே வாழ்ந்து வருகிறார் சித்தி இத்னானி. ஆனால், அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சொத்துக்கு ஆசைப்பட்டுச் சித்தி இத்னானியையும் மணமுடித்து தங்கள் வீட்டுக்கு கொண்டு வர முயற்சி செய்கின்றனர். இதற்குச் சம்மதிக்காத அவர், மதுரை சிறையிலிருக்கும் காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம் என்பவரை சந்திக்கச் செல்கிறார். யார் இந்த காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம்? அவர் சிறைக்குச் செல்ல என்ன காரணம்? சித்தி இத்னானி ஏன் அவரைச் சந்திக்கச் செல்கிறார் என்ற கேள்விகளுக்குப் பதில்தான் மீதிக்கதை.



தனக்கெனத் தனிப் பாணி கொண்ட முத்தையா இம்முறை கையிலெடுத்திருக்கும் களம் சமகால அரசியல் சூழலில் முக்கியமானது. சாதியை இரண்டாவது கட்டமாக வைத்து இந்து - முஸ்லிம் மத ஒற்றுமையை முதன்மைப் படுத்திப் பேச முயற்சித்திருப்பதும், 'ஜமாத்தும் - சபையும் ஒண்ணாதான் இருக்கும். அத மாத்த முடியாது' எனச் சமய ஒற்றுமைக்கான தேவையை விளக்கியிருப்பதும் கவனத்

2020தேர்தலில் தனக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கிழக்கு மாகாண உறுப்பினர் ஒருவருக்குக் கொடுத்திருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு, அதை மீறிச் செல்வராசா கஜேந்திரனுக்குக் கொடுத்ததற்குக் காரணம் தேர்தலுக்காக அதிக பணத்தைச் செலவிட்ட புலம்பெயர் அமைப்புகளின் நிர்ப்பந்தமே என்று சொல்லப்படுகிறது. இத்தIயாக செயற்பாடுகளே தமிழ்த்தேசிய மக்கள் முன்னயியின் அரசியலில் தொடர்ந்து பின்னடைவைக் கொடுக்கின்றன.

கட்சி எடுக்கும் தீர்மானங்கள் என்பதற்கு அப்பால் புலம்பெயர் அமைப்புகள் சிலவற்றின் செயற்பாடுகளுக்கு ஏற்பவே செல்வராசா கஜேந்திரன் செயற்படுவதாகத் தெரிகிறது.

**சிறிதரானா கஜேந்திரானா?**

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் காரசாரமாக உரையாற்றித் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்துவது வழமை. இதில் சிறிதரன் வல்லவராக இருப்பதால் அது கஜேந்திரனுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதனால் சிறிதரனை விடத் தனது தமிழ்த் தேசியப் பற்றை வெளிக்காட்ட வேண்டிய கட்டாயம் கஜேந்திரனுக்கு உண்டு,

அண்மையில் தையிட்டி விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்துச் செல்வராசா கஜேந்திரன் தொடங்கிய போராட்டத்துக்குச் சிறிதரன் சென்றது கஜேந்திரனுக்குப் பிரச்சினையாகிவிட்டது. அங்கயன் இராமநாதன் கொண்டுபோய்க் கொடுத்த குளிர்பானங்களையும் பிஸ்கற்றுக்களையும் அங்கயன் அங்கிருந்து வெளியேறிய பின்னர் கஜேந்திரன் தூக்கி எறிந்த செய்தியை சமூக வலைத்தளங்களில் காணமுடிந்தது.

தான் மட்டும் போராடிப் பெயர் எடுக்க வேண்டும் என்ற கஜேந்திரனின் போக்கு தமிழ்த் தலைவர்களுக் கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தத் தடையாகவுள்ளது. புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றின் தேவைக்காக ஆர்ப்பட்டங்களையும் எதிர்ப்புகளையும் நடத்த வேண்டிய தேவை கஜேந்திரனுக்கு இருப்பதால் கொள்கை ரீதியாக ஒரே நிலைப்பாட்டை எடுக்கும் ஏனைய தமிழ்த் தலைவர்களைக்கூட கஜேந்திரன் ஏற்றுக்கொள்வதில்லை.

**மக்கள் தீர்ப்பு**

கஜேந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக ஆகிவிடக்கூடாது என்பதில் 2020 தேர்தலில் மக்கள் தெளிவாக இருந்தார்கள். அதன் பின் அவரை நடாளுமன்ற உறுப்பினராக்கியது மக்கள் அல்ல என்பதால் கஜேந்திரனின் போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பதில்லை. மாறாக மக்கள் மத்தியில் சவப் பெட்டிக் கஜேந்திரன், குதிரைக் கஜேந்திரன் என்ற பெயர்களே அவருக்குண்டு. இதனால் அவருடைய போராட்டங்களை மக்கள் கண்டுகொள்வதில்லை. நினை வேந்தல்கள், போராட்டங்களைப்போல ஏதாவதொரு சம்பவம் புதிதாக நடந்தால் கட்டைக் கஜேந்திரன் களமிறங்கப் போறான் என்று வேடிக்கையாகக் கூறும் நிலையே மக்கள் மத்தியில் காணப்படுகிறது. கஜேந்திரனைப் போல ஏனைய அரசியல் தலைவர்களும் மக்கள் மத்தியில் தமக்கிருக்கின்ற பெறுமான - பேச்சுக்களை விளங்கிச் செயற்பட வேண்டும். தேடியறிந்து செயற்பட வேண்டும்.

துக்குரியது.

'மாட்ட வைச்சு அரசியல் பண்ற சோலி வைச்சுக் காத', 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயில மண்ணு இப்போ தேவையில்ல. அல்லாவும் அய்யனாரும் ஒண்ணூ அத அறியாதவன் வாயில மண்ணு' எனப் பிரிவினைக்கு எதிரான வசனங்கள் கூர்தீட்டப்பட்டுள்ளன. ஆனால், ஒட்டுமொத்தப் படமாகப் பார்க்கும்போது இலக்கை நோக்கி வீசப்படும் அம்புகள் பாதை மாறியிருப்பதை உணர முடிகிறது. படத்தில் சண்டைக் காட்சிகள், முற்காலக் காட்சிகள் இந்த இரண்டையும் நீக்கிவிட்டால் வெறும் தலைப்பு மட்டுமே மிஞ்சும் என்ற அளவுக்கு சகட்டுமேனிக்கா சண்டைகளை வைப்பது?

யாருக்கு யார் அப்பா? யாருக்கு யார் அண்ணன்? அக்கா? அவருக்கு இவர் யார்? இவருக்கு அவர் யார்? - இப்படி நான்கைந்து இடியாப்பத்தை ஒன்றாகப் பின்னிக் கொடுத்ததைப் போல உறவுமுறைகளை நினைவில் வைப்பதும், அதைப் பின்தொடர்வதும், அவர்களுக்கான உணர்வுபூர்வக் காட்சிகள் தொடர்புறாததும் பெரும் சிக்கல். மேலும், ஆர்யாவுக்கு கொடுக்கப்படும் மிதமிஞ்சிய நாயகத்தனம், பெண் பார்க்கும் காட்சி, காரணமேயில்லாமல் காதல் பாட்டு, தவிர சண்டையை தின்று கொழுத்த முதல் பாதி எனத் திரைக்கதையில் அயற்சிக்குப் பஞ்சமில்லை.

காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கமாக ஆர்யா. முத்தையாவின் வழக்கமான நாயகன்தான். அதாவது, மற்ற படங்களில் முத்தையாவின் நாயகர்கள் தொடை தெரிய வேட்டி கட்டுவார்கள். இந்தப் படத்தில் வேட்டியைக் கழட்டி வைத்து வெறும் உட்காற்சட்டையுடன் சண்டையிடுகிறார் ஆர்யா. இதனால்தன் செலவை பெருமளவில் மிச்சமாக்கி தயாரிப்பாளருக்கு நன்மை சேர்த்திருக்கிறார் ஆர்யா.

உண்மையில் அவருக்கு ஒரே ஒரு கறுப்பு சட்டை, கறுப்பு வேட்டி, சமயங்களில் வேட்டி கழற்றி வைக்கும் போது காணாமல் போவதாலோ என்னவோ, மாற்றாக ஒரு வெள்ளை வேட்டி வைத்திருக்கிறார். ஆக்ரோசக் கிராமத்து இளைஞராக அழுத்தம் கூட்டும் ஆர்யா கண்ணீர் சிந்தும் இடங்களில் அவரின் நடிப்பு தாமரை இலைமேலிருக்கும் தண்ணீராய் ஒட்டவில்லை. சித்தி இத்னானியைக் கிராமத்துப் பெண் கதாபாத்திரத்தில் ஏற்றுகொள்ள நேரம் பிடிக்கிறது. டப்பிங் பிரச்சினையும், சில செயற்கைத் தன்மையும் யதார்த்தத்திலிருந்து விலக்கிவிடுகிறது.

மீசை மழித்து பழிவாங்கும் வெறியுடன் திரியும் வில்லன் கதாபாத்திரத்தில் ஈர்க்கிறார் தமிழ். 'இராவண கோட்டம்' பிரபுவை அப்படியே இப்படத்திலும் பார்க்க முடிகிறது. அதே மாவட்டம் அதே கண்ணியமான கதாபாத்திரம் என்றாலும் இதில் தொப்பி மட்டும் மேலதிக இணைப்பு. மற்றபடி நடிப்பு சேம். தவிர பாக்யராஜ், 'ஆடுகளம்' நரேன், சிங்கம் புலி, மதுசூதனன் ராவ், அவினாஷ் கிராமத்து மனிதர்களுக்கான நடிப்பைக் கொடுத்துள்ளனர்.

**சண்டைக் காட்சிக்கான வேகத்தை தன் பின்னணி** இசை மூலம் கூட்டியிருக்கும் விதத்தில் கவனிக்க வைக்கிறார் ஜி.வி.பிரகாஷ்குமார். ஆனால், சமயங்களில் 'கஞ்சா பூ கண்ணால' பாடல் இசை ஊடாக பயணிக்கும் உணர்வும் எழுகிறது. வேல்ராஜின் ஒளிப்பதிவில் ஆக்ஷன் காட்சிகளுக்கு அதிக நேரம் செலவிடப்பட்டதால், ஈர்க்கும் சட்டகம் இல்லை என்றாலும், நிலத்தையும் மக்களையும் அசல் தன்மையுடன் பிரதிபலிக்கிறது.




முத்தையாவின் சினிமாப்போக்கை எடுத்துக் கொண்டால், அவரது இயக்கத்தில் வெஎ;வேறு நடிகர்கள் நடித்த போதிலும், கதைக்களம் கிராமத்தையும், உறவுகளையும், பழிவாங்குதலையும், சண்டையையும் மையப்படுத்தியே தொடர்ந்து கொண்டிருக்கும். அப்படியான படமாக வெளிவந்துள்ள காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம் சமகால அரசியலை யொட்டி கன்டென்டை சுமந்ததால் கவனம் பெறுகிறது. தவிர, வேறு எந்த மாற்றமுமில்லை.

# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)

11




கொழும்பு கிறிஸ்தவ தேவாலயமொன்றின் சற்பிரசாத பூசையில் கலந்துகொண்டு, பிரசாங்கத்தின்போது முழந்தாளிட்டு வணங்கிய பக்தி பூர்வமான இளமைக் காலம் அவருக்கு மறந்து போயிருக்கலாம். இப்போது அவர் புத்தர் சிலையின் முன் ஒரு மனத்தவராய் நின்று இரு கரங்களையும் உச்சியில் நிறுத்தி வழிபடுகிறார். முன்னர் அவர் உண்மையான கிறிஸ்தவராய் இருந்தாரா? இப்போது அவர் உண்மையான பௌத்தர் தானா? அவருடைய தற்போதைய பௌத்த மதப் பற்றும், முந்தைய கிறிஸ்தவ மத பக்தியும் நடிப்பு அல்லவா? எனக் கேட்பதற்கு நான் துணிய மாட்டேன். எனினும் அவருடைய வழமையான செயற்பாடுகள் எளிதில் புரிந்துகொள்வதற்குக் கடினமானவை. கடந்த காலத்தில் அவர் தீவிர இடதுசாரியாவார். மார்க்சியவாதியுமாவார். இலங்கை - சேவியத் நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர். சிங்க ளம் - தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் அரச கரும மொழிகளாக்கக் கோரி நீண்ட காலமாக மனிதா பிமானத்துடனும் நடுநிலையுடனும் போராடிய அவர், இன்று முன்வைப்பது அதிலிருந்து முற்றிலும் மாறு பட்ட கருத்தாகும். இலங்கையின் அனைத்துச் சமூ கங்களினதும் இரட்சகராகத் தோற்றமளித்த ஜெயவர்த்தனாவுக்கு இப்போது தமிழ் மக்களுக்கு எதிராகப் புனிதப்போர் ஒன்றைத் தொடுப்பதற்குத் தேவையாகவுள்ளது. என்ன விளையாட்டு இது? என்ன வஞ்சனை இது?

பௌத்த வேஷம் தரித்துக்கொண்ட ஜெயவர்த்தன, ஆரம்பத்தில் இலங்கை விடுதலைப்போராட்ட முன்னோடியான ஈ.டபிள்யு பேரேராவுக்குச் சவால் விட்டு மதவாதத்தைத் தூண்டினார். இலங்கையில் எவரும் இன்னும் இக்கலகத்தை மறந்துவிடவில்லை. அப்போது தன் வாழ்வின் இறுதிக்காலகட்;டத்தைக் கழித்துக்கொண்டிருந்த பேரேரா பெற்றிருந்த - நிச்சயமாகவே அவருக்கு உரித்தான - கீர்த்தி நாமத்தைக் களங்கப்படுத்தி, அவ்வயோதிபருக்கு நிரந்தர மனக் குழப்பத்தை ஏற்படுத்தி, கண்ணீர் வடிக்கக் காரணமாகியது குறித்து ஜெயவர்த்தனா வெட்கப்பட வேண்டும். ஜெயவர்த்தனாவைக் களனி ஆசனத்திலிருந்து

சற்றுப் புதுமை

# கழுவேத்தி மூர்க்கன்

இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தின் தெக்குப்பட்டி கிராமத்தில் சாதியப் பாகுபாடுகள் நிரம்பிக் கிடக்கின்றன. அங்குள்ள உயர்சாதி எனக்கருதப்படும் சமூகத்தைச் சேர்ந்த மூர்க்கசாமியும் (அருள்நிதி) ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் பூமிநாதனும் (சந்தோஷ் பிரதாப்) ஆருயிர் நண்பர்கள். சாதியப் பாகுபாடுகளிலிருந்து தனது மக்களை விடுவிக்க போராடும் பூமிநாதனுக்கு ஆதரவாக இருந்து தனது சாதியினரையே எதிர்க்கிறார் மூர்க்கசாமி. இப்படியிருக்க அந்த ஊர் மாவட்டச் செயலாளராக இருந்து பதவி பறிக்கப்பட்ட முனியராஜ் (ராஜசிம்மன்) அரசியல் இலாபத்துக்காகப் பூமிநாதனைக் கொல்லத் திட்டம் தீட்டுகிறார். அவரின் திட்டம் நிறைவேறியதா? மூர்க்கன் இதில் பலிக்கடாவானாரா இல்லையா என்பதுதான் மீதித் திரைக்கதை.



**பலம் - பலவீனம்**

இருவேறு

அகற்றியது மாத்திரம் போதுமானதன்று.

இந்த நாட்டை ஆத்ம கௌரவ மிக்க நாடாக மாற்றுவதற்கு அடிப்படையாய் அமைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இலங்கை - சீன நட்புறவு உடன்படிக்கைக்கு எதிரான அவருடைய போராட்டம் நாடறிந்தது. கட்சியின் மேல் அவருக்குள்ள ஈடுபாட்டையும் அவருடைய கொள்கைப் பிடிப்பையும் கொத்தலாவலைக்கு எதிரான அவருடைய சதித் திட்டம் காட்டியது.


சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி மாறாதிருப்பது சிலவேளை பேதமையின் இலட்சணமாய் இருக்கலாம். ஆனால் எவராவது ஒருவர் தனது சுய லாபத்துக்காகத் தந்திரமாக அடிக்கடி மாறிய வண்ணம் ஏமாற்றும் தன் குணத்தை மக்களுக்குப் புலப்படுத்திக் கொள்கின்றாரோ அப்போது எப்போதும் விழிப்புடன் இருக்கும் ஓர் இனத்தை முட்;டாளாக்குவது அவ்வளவு எளிதான காரியமன்று.

தம்பி முதலி பரம்பரையினர் தமது பக்கச் சார்பு நிலையை மாற்றுவது தொடர்பில் பிரதான சாதனை படைத்துள்ளனர் என்பதை எப்படியும் மறுத்துவிட முடியாது. முதலில் தமிழ் ஆதரவாளர்களாயிருந்து பின்னர் டச்சு ஆதரவாளர்களாக ஆனார்கள். அதன் பிறகு பிரித்தானிய ஆதரவாளர்கள் ஆனார்கள். அவர்களுடைய நோக்கம் என்னவாக இருந்தாலும் இப்போது சிங்கள ஆதரவாளர்களாக இருக்கிறார்கள்.

அவர்கள் கட்டும் ஆதரவு உண்மையோ, போலியோ, இந்தப் புதிய அன்பு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மாயமேயன்றி வேறொன்றுமில்லை. எதிர்காலத்தில் ஒரு நாள் ஏதோவொரு ஈவிரக்கமற்ற விதியின் அழுத்தத்தால் இலங்கை இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வருமானால் ஜூனியஸ் ரிச்சார்ட் ஜெயவர்த்தன, தான் எதிர்காலத்தில் தீர்க்கதரியின் கிட்டிய உறவினர் என்று கூறாவிடில் உண்மையில் வியப்புக்குரியதே. சுயநலத்தைத் தவிர நாடு பற்றிய அக்கறை இவ்வாறான அர சியல்வாதிக்கு இருக்க முடியாது. இவ்வாறான மனிதர்கள் மிகப் பயங்கரமானவர்கள். அய்யகோ நாட்டுக்கு ஆண்டவனே காவல்!

(நிறைவு)

சமூகங்கள், அவர்களிடையேயான சாதியப் பாகுபாடு, ஒரே சமூகத்தின் இரண்டு பிரிவுகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகள், தங்களைச் சுற்றியிருக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேறும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் காட்சிப்படுத்தியதில் 'கழுவேத்தி மூர்க்கன்' வழக்கமான கிராமத்துத் தென்னிந்தியச் சினிமாக் கதைகளிலிருந்து விலகி நிற்கிறது. குறிப்பாக, ஒடுக்கப்படும் மக்களின் பக்கம் மற்றச் சமூகத்தினர் நிற்க வேண்டிய தேவையையும், சுய சாதிப் பற்று சொந்த சாதிக்காரனையே எப்படி பலி கொடுத்துவிடும் என்பதையும் சொன்ன விதம் அடர்த்தி கூட்டுகிறது.



இப்படியாக கனதியைக் கூட்டும் படம், அதைச் சொன்ன விதத்தில் உரிய அழுத்தமில்லாத சில காட்சிகளுக்குள் சிக்கித் தவிப்பது ஏமாற்றம். எந்த வேலைக்கும் போகாமல், சண்டித்தனம் செய்து, புல்லட் ரக மோட்டார் சைக்கிளில் சுற்றித் திரியும் நாயக கதாபாத்திரம், அவருக்கான ஒரு பள்ளிக் கூடக் காதல், காதலுக்கான பாடல்கள் என்ற வழமை இந்தப் படத்திலும் தப்பவில்லை. படத்தின் மையமான பூமிக்கும் மூர்க்கனுக்குமான நட்புக்கான காட்சிகளை வலுப்படுத்துவதற்குப் பதிலாகக் காதல் காட்சிகளில் கவனம் செலுத்தியதால், இரண்டாம் பாதியில் நடக்கும் சம்பவங்கள் பார்வையாளர்களுடன் ஒட்ட மறுக்கின்றன. சொல்லப்போனால் பூமிக்கும் மூர்க்கனுக்குமான மாற்று சாதியைக் கடந்த நட்புக்கான காரணத்தில் அழுத்தமில்லை. படத்தின் இறுதியில் தலைப்புக்கு நியாயம் சேர்ப்பதற்காக வைக்கப்பட்ட காட்சியும், இழுத்துக்கொண்ட போன திரைக்கதையும், சில யதார்த்த மீறல்களும் சிக்கல்.



**பாத்திரங்கள்**

'த்ரில்லரும் அருள்நிதியும்' எனச் சினிமாத்து துறையில் த்ரில்லருடன் ஒட்டியிருந்தவரை பிரித்து அவருக்கு 'மீண்டும்' கிராமத்து முகம் கொடுத்திருக்கிறது இப்படம். முறுக்கு மீசை, மடித்துக்கட்டிய வேட்டி, இழுத்து பேசும் வட்டாரமொழி, கன்னத்தை ஆட வைக்கும் ஆக்ரோஷம் என அசல் இராமநாதபுரத்துக்கார இளைஞராக மிரட்டுகிறார். குறிப்பாக சந்தோஷ் பிரதாப்பின் அம்மாவிடம் அழும் காட்சி ஒன்றில் கலங்க வைக்கிறார்.

யாருக்கும் அடங்காமல், எதிர்த்துப் பேசும் திமிரான உடல்மொழியில் தனது வழக்கமான நடிப்பில் கிராமத்துப் பெண்ணாக ஈர்க்கிறார் துஷாரா. இரண்டாம் பாதியில் அவருக்கான வசனமும் கவனம் பெறுகிறது. தன் சமூக மக்களுக்கு 'கல்வி'யின் வழியே விடுதலை பெற்றுத்தந்திட வேண்டும் என்ற முனைப்பு கொண்ட இளைஞனாக சந்தோஷ் பிரதாப் பொறுப்பை உணர்ந்து நடித்துள்ளார். எதிர்ப்பு குணம் கொண்ட அமைதியான இளைஞனாக அவரின் கதாபாத்திரம் எழுதப்பட்ட விதம் நேர்த்தி. காவல் துறை அதிகாரிக்கு முன்னால் எந்த தயக்கமுமில்லாமல் 'கெத்தா'க பேசும் முனிஷ்காந்த் நன்றாக நடித்துள்ளார். சரத் லோகித்சவா, ராஜசிம்மன் உள்ளிட்டோர் தேவையை உணர்ந்து நடித்துள்ளனர்.

**இசை, காட்சித் தொகுப்பு**

அருள்நிதியின் அறிமுகம் தொடங்கி நிறைய இடங்களில் டி.இமானின் பின்னணி இசை ரசிக்க வைத்து, சம்பந்தப்பட்ட காட்சிகளுக்குப் பலம் சேர்க்கிறது. திரையை விட்டு எதிரிகள் எதிர்ப்புறம் விழுந்துவிடுவார்களோ என்ற அளவில் கே.கணேஷ் குமார் சண்டைக் காட்சிகளில் மெனக்கெட்டிருப்பதை உணர முடிகிறது. வெயிலை ஒளியாகக் கொண்டு மொத்த கிராமத்தையும் அதன் அசல் தன்மை மாறாமல் காட்சிப்படுத்தியிருந்த ஸ்ரீதரின் கமராவும், அதற்கான நாகூரானின் காட்சித் தொகுப்பும் படத்திற்கு பலம்.

வழக்கமான கிராமத்துக் கதைக்கான திரைக்கதை மொழி கையாளப்பட்டிருந்தாலும், உள்ளடக்கத்திலும் சொல்ல முனைந்திருக்கும் விடயங்களில் படம் புதுமை சேர்த்திருக்கிறது.

# மறதியும் நல்லதுதானாம் உண்மையோ?

**கதிரேசன் காத்தவராயன்**



அதிலை கந்தையாண்ணை வீட்டடிக்குப் போவமெண்டு போனன். அவர் கோயிலடிக்குப் போட்டா ரெண்டினம். என்னோடை கூட வந்த முருகேசர் 'திருவிழாவல்லே... நாங்கள் அவடத்துக்குப் போவம்' எண்டார். போனம். கோயிலடிக்கு ஒரு மைல் அளவுக்குப்போக வேணும். 'சரி பொழுது போகுமல்லே எனி புதினங்களும் பாக்கலாந்தானே' எண்டு நானும் சொல்லிக்கொண்டு போனம்.

'இஞ்சார்..கதிரேசண்ணை கந்தையர் கோயில் குளமெண்டு போகாதவரல்லே? கொமினிஸ்றகாறனல்லோ?' எண்டார் திடீரெண்டு வழியிலை முருகேசர். 'ம்ம்.. அது அந்தக் காலம்.. இப்ப மாறிவிட்டார்... புரட்டாதிச் சனிக்கு விரதமிருக்கிறவரல்லே இப்ப...' எண்டு நான் சொல்ல சிரிச்சார்.

'இஞ்சையிருந்து லைற் கட்டியிருக்கிறாங்கள்...' எண்டு நான் சொல்ல அப்ப கதைக்க வேண்டியதை இதிலை நிண்டுதான் கதைக்க வேணும்...அங்காலை சத்தங் கேட்குது..போகப் போகக் கூடிக் குழறலாயிருக்கப்போகுது'எண்டு முருகேசர் புறுபுறுத்தார். அவர் சொன்னதுதான். காது கிழியத்தொடங்கிச்சுது.

'ஓஎல் பிள்ளையள்தான் கறுமங்கள்... கோயிலடிப் பக்கம் போக வீட்டிலை விடாதுகள்... என்ன?' எண்டு சத்தமாக் கேட்டார் முருகேசர். வாற வரியமும் திருவிழா வருந்தானே?' எண்டு சாதாரணமாச் சொன்னன்.

கனக்கக் கதைக்கலாம் போலைதான் கிடந்துது. எண்டாலும் ஸ்பீக்கருகளை நினைச்சு வாயை மூடிக்கொண்டன். முருகேசரும் அப்பிடித்தான் நினைச்சாரோ தெரியேல்லை கதை பேச்சில்லை. 'என்னப்பா கதிரேசண்ணை றோட்டு வலு மோசமாக் கிடக்குது போடயில்லைப் போலை..?..' எண்டார் ஒருகிடங்கிலை விழுந்து எழும்பேக்குள்ளை. நானென்னத்தைச் சொல்ல? றோட்டைப் பாத்து ஓட்டினன்.

'பங்கார் கதிரேசண்ணை கந்தையாண்ணையோ...' எண்டு கேட்டார். ' ஓஓஓ... அவர்தான் பேரப் பெடியோடை வாறார்... இதிலை நிப்பம் வரட்டும்' எண்டுகொண்டு மோட்டச்சைக்கிளை நிப்பாட்ட கந்தையாண்ணையும் வந்திட்டார். 'என்னப்பா திடீரெண்டு இஞ்சாலை காத்தடிச்சிருக்கு... அட முருகேசுவுமே..' எண்டுகொண்டு கிட்டவாய் வந்தார்.

'இவன் தனிய வரப் பயமாம்...பிடிகாறரெண்டு...

அதுக்கு அவர் ' கோயிலடிக்குப் போறதை விட இந்தச் சத்தம் வீட்டுக்கை வந்து குழப்பாதோ?' எண்டு எரிஞ்சார் முருகேசர்.

திடீரெண்டு காதைப் பழக்கிற வெடிச்சத்தம் தலைக்கு மேலையாக் கேட்டுது. முருகேசர் பின்னாலையிருந்து திடுக்கிட்டிருக்க வேணும் மோட்டச் சயிக்கிள் ஒருக்காத் தளம்பிச்சுது. 'என்னப்பா முருகேசு வெடிக்குத் திகைக்கிறாய்?' எண்டதுக்கு 'உதென்னண்ணை சத்தம்? கனகாலமாகி மறந்ததுதான் பிரச்சனை ஒருக்காப் பக்கெண்டுது' எண்டு சிரிச்சார்.

எமதேயான எமது பாரம்பரிய தாவரங்களுக்கு கேள்வியில்லாமலாகிவிட்டது என்பது ஒருபுறம் அதிகளவான புதிய நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகி விட்டன என்பது மறுபுறம். புHரம்பரிய இனங்களது ஆயுளினது நீளம், ஒப்பீட்டளவில் குறைவான விளைச்சல், பார்வைக் கவர்ச்சிக் குறைவு போன்ற காரணங்களால் நாம் அவற்றைப் பயிரிடுவதைக் குறைத்துவிட்டோம். மறுபுறமாக அறிமுகப்படுத்தப் படுகிற புதியமரபணு மாற்றப்பட்ட தாவரங்களுக்கான ஊக்குவிப்புகள் மிக அதிகம். அவை எமது பாரம் பரிய இனங்களது குணங்களுக்கு எதிரான குணங் களைக் கொண்டிருக்கின்றன. காலங்குறைவு, அதிக அறுவடை, பார்வைக் கவர்ச்சிகூட என்ப வையே அவை.

புதிய இனங்களது சுவை, போசணைக்கூறுகள் எமது பாரம்பரிய இனங்களைவிட மிகக் குறைவான வையே என்பதை நாம் கவனிக்கத்தவறுகிறோம். இலாபம் என்கிற வகையிலான பிரச்சாரம் சந்தையில் காணப்படும் கேள்வியால் எழுகிற உடனடி முடிவால்



உறுதியாக்கப்படுகிறது. எனவே புதிய இனங்கள் மீதான நாட்டம் ஏற்படுகிறது.

கறுத்தக்கொழும்பான் என்கிற எமதேயான அடை யாளமான மா மரங்கள் ஆடம்பர அழகுக்காகவும் குப்பை கொட்டுகின்றன என்கிற குற்றச்சாட்டுடனும் தறிக்கப்பட்ட விட்டன. தப்பி நிற்பவைகூடக் காய்ப் பதை குறைத்த விட்டன அல்லது நிறுத்திவிட்டன. அறிமுகப்படுத்தப்பட்ட மரபணு மாற்றப்பட்ட மாமர இனங்களோடு வந்த நோய்கள் பெரியளவான பாதிப்புகளை உண்டுபண்ணுகின்றன.

அந்த வகையில்தான் எமது பப்பாசி, மாதுளை முருங்கை, கொய்யா, கத்தரி, மிளகாய், பாகல், பூசணி போன்றவற்றுக்கும் ஆகியிருக்கிறது. இவை தமது வளர்ச்சியைக் குறைத்து விட்டன அல்லது வளரமுடி யாது அப்படியே நின்றுவிட்டன. பூப்பது அருகிவிட் டது. காய்கள் நோய்ப்பாதிப்புகளால் உதிர்ந்து விடு கின்றன. பாரம்பரிய இனங்கள் மீதான அதிக பற்று

# மீட்டல்...

## 13

துன்பானந்த சுவாமி

தாயும் விடுகிறாளில்லை... கோயில் காட்டிக்கொண்டு வாறன்' எண்டு தொடங்கினார். 'சும்மா கனகாலம் உன்னைக் கண்டு அதுதான் வீட்டடிக்குப் போனனம்... நீ இஞ்சையெண் டினம்...நீ கோயிலுக்கெண் டதை நம்பாமைத்தன் வந்த னாங்கள்' எண்டன் கெக்கட் டம் போட்டுச் சிரிச்சார்.

'இஞ்சார் உந்த நையாண்டி உங்களை விட்டுப் போகாது போலை? ருண்டு குழாய ளுக்கிடையிலை நிக்கிற தாலை கொஞ்சம் கதைக்கக் கூடியதாக் கிடக்குது... அங் காலை கோயிலடியிலை நிக்க மண்டைவெடிக்குது சத்தம்' எண்டு கந்தையர் சொல்லிக் கொண்டிருக்க தலைக்கு மேலை வெடி காதைப்பிழந் துது. அண்ணாந்து பாத்துப் போட்டுச் சிரிச்சார். நாங்களும் சிரிச்சம்.

'ராத் திருவிழாக்கு வாண வேடிக்கையாம்... காலமையே விட்டு விட்டு வெடிக்கிறாங் கள்... சனத்துக்குச் சாப்பிட வழியில்லை... அதுக்கை உதொரு கண்டறியாத கூத்து' எண்டார் கந்தையர் எரிச்ச லோடை. 'எங்கடையாக்கள் காசைக் கரியாக்கிறதிலை வலு விண்ணருகளல்லே? இப்பதான் வெடியளாலை கொத்துக் கொத்தாச் செத்த சனங்களை நினைச்சுக் கண் ணீர் விட்டனாங்கள்...அதுக் குள்ளை இது?' எண்டார் முரு கேசர்.

'உண்மைதான்... நாங்கள் ஒண்டைக்கண்டால் இன் னொண்டை மறக்கிற ஆக்க ளல்லே? பஞ்சம் எண்டிறம்.. வெளிநாட்டுக் காசைக் கண்ட உடனை பஞ்சம் மறந்திட் டுது...லீசங்காறர் கலைக்க மருந்து குடிச்சவனும் இந்த உபயகாறரிலை ஒராள்...பாருங் கோவன் விளையாட்டை?' எண்டார் கந்தையர். 'இஞ்சார் எல்லாத்தையும்மண்டேக்கை வைச்சிருந்தால் விசரல்லே பிடிக்கும்..மறக்கிறதுதான் வழி' எண்டன். சிரிச்சினம். கந்தையரோடை வீட்டை போகவெளிக்கிட்டம்.

இருந்தாலும் பொருளாதார அச்சுறுத்தல் அவற்றைப் பயிரிடத் தயக்கத்தையே ஏற்படுத்துகிறது.

மறுவளமாக நுகர்வோரது நிலையில் கண்களுக்குக் கவர்ச்சியான மலிவான என்கிற இரு முக்கியமான விடயங்களே கவனத்திற் கொள்ளப்படுகிறது. அத்தோடு அந்தஸ்த்துஎன்கிறவிடயமும்செல் வாக்குச் செலுத்துகிறது. மரவள்ளிக் கிழங்கு சமைத்தோம் என்பதைவிட உருளைக்கிழங்கு சமைத்தோம் என்பது பெருமைக்குரியதாகிவிட்டது. முசுட்டையிலை முருங்கையிலை வறுத்தோம் என்பதைவிட லீக்ஸ்வறை, கோவா வறை பெருமைக்குரியதாகிவிட்டது. பயற்றங் காயைவிட முருங்கைக்காயளவு நீளமான போஞ்சி விரும்பப்படுகிறது.

வெளிர் நிறத்தாலான சிறிய கீரையைவிட கரும்பச்சையான வாழையிலையளவு இலை கொண்ட கீரையைத்தான் விரும்பி வாங்குகிறோம். ஊர்ப்பயற்றை விட பன்றித் தீவனமாகப் பயன்படுத்தப்படும் மஞ்சள் பருப்புக்குத்தான் அலைகிறோம். நாங்கள் உண்பவை எவை? எப்படி விளைந்தன? போன்று எப்போதாயினும் எண்ணியுள்ளோமா? இங்கும் தவறான முன்னுதாரணங்கள், வழிகாட்டுதல்கள் என்பவற்றோடு சேர்ந்து பொருளாதார ரீதியான இலாபநட்டம் பார்க்கும் பழக்கமும் எமது நுகர்வு மாற்றத்துக்கான பிரதான காரணங்களாக உள்ளன.

மரக்கறிகள் பழங்கள் என எல்லாவற்றையும் பார்வைக் கவர்ச்சியால் மட்டுமே மதிப்பீடுசெய்து நுகர்கிறகலாச்சாரத்துள் சிக்குண்டு போயிருக்கிறோம் என்பதே உண்மையானது. உள்ளூரில் கிடைக்கும் பழங்களைவிட இறக்குமதிப் பழங்கள் அல்லது வணிகரீதியாக உற்பத்தியான பழங்களே அதிகம் செல்வாக்கோடு இருக்கின்றன.

அவை மரபணுமாற்றப்பட்ட தாவரங்களது விளைவுகளே என்பத ஒரு புறமிருக்க அவற்றினது உற்பத்திப் பொறிமுறையென்பது முழுக்க முழுக்க இரசாயனங்களது துணையுடனானவையென்பது கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடயமாயிருக்கிறது. ஆனால் அதைப்பற்றி நாம் கவனிப்பதில்லை. நேரமில்லை அல்லது அந்தளவிற்கு அறிவில்லை. இயற்கையான பசளைகளால் விளைவிக்கப்பட்டவற்றை விட இரசாயனங்களால் விளைவிக்கப்பட்டவை கவர்ச்சியானவைஎன்பது மட்டும் உண்மை. சிலவேளைகளில் மலிவானவை என்பதையும் கூறமுடியும்.

நாவல், அன்னமுன்னா, பாலை, வீரை, இலந்தை, தேசி, விளாத்தி என ஒரு நீளமான பட்டியலைக் கொடுத்தால் அவற்றுள் பல பழங்களை மனிதன் உண்ணலாமா? எனக் கேட்கக்கூடிய ஒரு மனிதக் குழுவாக உள்ளோம் என்பது உண்மை. எமது மண்ணுக்கேயான பல பழங்களை மறந்த அல்லது அறியாத ஒரு தலைமுறையில் நிற்கிறோம். எமது கல்வி முறையும்இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

பழங்களைப்பற்றி பேசுவதற்கு நிறையவே உள்ளன. பேசுவோம்.

## இந்த வாரச் சொல்

# பாண்டல்

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் இடம்பெறும் சொற்களில் இதுவும் ஒன்று. எண்ணை சேர்க்கப்பட்ட அல்லது எண்ணையில் பொரிக்கப்பட்ட பாண்டங்களில் காலப்போக்கில் ஏற்படும் நெதிய மாற்றத்தையே பாண்டல் என்கிறார்கள். எண்ணையில் பொரித்துப் பொதி செய்யப்பட்ட பொருள்கள் மற்றும் எண்ணையில் பொரித்துக் கலன்களில் இட்டுப் பாதுகாக்கப்பட்டுப் பன்படுத்தப்படுகிற பொருள்களில் ஏற்படுகின்ற நெதிய மாற்றமாகவோ தாக்கமாகவோ கொள்ளத்தக்கதையே இவ்வாறு பாண்டல் என்கிறார்கள்.

பாண்டல் என்பதன் அர்த்தமாகப் பழுதடைவதற்கு முன்புள்ள தன்மை, பொருள்களின் சேர்க்கையால் உண்டாகிய மாறுபாடு, எண்ணை சேர்க்கப்பட் பொருள்களில் ஏற்படுகின்ற மாற்றம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதைவிட அழுக்கு என்கிற அர்த்தத்திலும் பாண்டல் பயன்படுத்தப்படுகிறது.

''உந்த மிக்சர் பாண்டல் மணமடிக்குது''

''பொரிச்ச எண்ணை சரியில்லைப்போல முறுக்குப் பாண்டலடிக்குது''

''கனகாலமா மூடி வைச்சிருந்த பலகாரம் பாண்டலடிக்குது''

எண்ணையில் தயாரிக்கப்பட்ட திண்பண்டங்களில் ஏற்பட்;ட மாறுதல்களைக் குறிக்கப் பாண்டல் என்கிற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதற்கு மேற்சொன்னவை உதாரணங்கள்.

''மாலாவின்ர பொடி எந்த நேரமும் ஊத்தையும் பாண்டலுமாய்த்தான் நிக்கும். அவள் கழுவுறதோ துடைக்கிறதோ இல்லை''

''அவன்ர பள்ளிக்கூட உடுப்பு சரியாப் பாண்டலடிச்சுப்போட்டு இண்டைக்குக் க்ட்டாயமாய்த் தோய்ச்சுப் போடவேணும்''

''வெள்ளை உடுப்போட போய் விளையாடு விளையாடென்டு விளையாடி அதைப் பாண்டலாக்கிக் கொண்டு வந்திருக்கிறான்''

இவை அழுக்கு அல்லது தூய்மையிழந்த தன்மையைக் குறிக்கின்றன.

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?

## காலிக் கோட்டை உயிர்ப்புடன் இருக்கிறது...?

51




இலங்கையின் காலி நகரில் கட்டப்பட்டுள்ள பழமையான கோட்டை இப்போதும் இயங்கு நிலையில் இருக்கிறது. அதன் காரணமாகக் காலிக் கோட்டை உயிர்ப்புடன் இருக்கிறது என்று சொல்லும் வழக்கம் உண்டாயிற்று. இலங்கையில் பழமையான கோட்டகள் பல இருக்கையில் காலிக் கோட்டையை மாத்திரம் ஏன் அப்படிச் சொல்கிறார்கள்...?

இலங்கையில் முதன் முதலில் கோட்டை கட்டியவர்கள் போர்த்துக்கேயர்கள். கி.பி 1505 இக்குப் பின்னர் இது நடந்தேறியது. சுதேசிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவே இவை கட்டப்பட்டன. அதன் பின்னர் ஒல்லாந்தர்களின் காலத்தில் பல கோட்டைகள் கட்டப்பட்டன. போர்த்துக்கேயர் கட்டிய கோட்டைகளை மேலும் விரிவுபடுத்தியும் பலப்படுத்தியும் கூட கட்டினார்கள் ஒல்லாந்தர்கள்.

இவ்வாறு காலணியாதிக்கவாதிகளால் பழங்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளில் பல கைவிடப்பட்டும் அழிவடைந்தும் காணப்படும் நிலையில் காலிக் கோட்டை மட்டும் இன்றும் இயங்குநிலையில் உள்ள கோட்டையாகக் காணப்படுகிறது. காலி மாவட்டச் செயலகம் கூட மிக அண்மைக்காHலம் வரை காலிக் கோட்டைக்குள்ளேயே இருந்து இயங்கி வந்தது. அதைவிடக் காலிக் கோட்டைக்குள் பல அலுவலகங்கள், மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளும் உள்ளன.

"பவுறு வளலு" என்ற சிங்களத் திரைப்படத்தில் காலிக் கோட்டைக்குள் உள்ள குடும்பங்களின் கதை படமாக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்தகைய காலிக்கோட்டை இன்றுவரை இயங்குநிலையில் இருக்கப் பல




காரணங்கள் உள்ளன.

காலிக்கோட்டை இன்றுவரை ஒல்லாந்து அரசின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்புக்குக் கீழ் உள்ளது. அந்தக் கோட்டைப் பகுதிக்குள் காணப்படும் ஒரு மின்குமிழ் பழுதடைந்தால்கூடக் கோட்டைக்குள் இருக்கும் களஞ்சியத்தில் மின் குமிழ் ஒன்றைப் பெற்றே பொருத்த முடியும். அது ஒல்லாந்துத் தயாரிப்பாக இருக்கும். அங்குள்ள யன்னலோ கட்டடத்தின் ஏதாவது பகுதியோ சேதமடைந்தால்கூட அங்குள்ள ஒல்லாந்து அரசின் அலுவலகத்துக்கு அறிவித்து ஏற்கனவே இருந்த வடிவம் மாறாமல் அதைக் கட்டியமைக்கவும் மீள் உருவாக்கவும் முடியும். இவ்வாறாக இன்றுவரை பழமை மாறாமல் பேணப்படுவதாலும் சுதேசிகள் அந்தக் கோட்டையைப் பயன்படுத்துவதாலுமே காலிக் கோட்டை உயிர்ப்புடன் உள்ளது என்ற கருத்து வலுப்பெற்றது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781